**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 72/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திரு . அம்பேத்கார் (தலைமை காவலர்) |
| Father's/Husband Name: | திரு. முத்துசாமி |
| Village : | அரும்பாவூர் காவல் நிலையம் |
| Taluk : | அரும்பாவூர் |
| Age : | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 4, 6 ஆஜர் இல்லை. அவர்களுக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது அரும்பாவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.12.2018ம் தேதி அன்று அரும்பாவூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக செல்வராஜ் என்பவர் பணியிலிருந்தார். அவர் தற்போது பணிஓய்வு பெற்று வெளியூரில் வசித்து வருவதாலும் தரப்பினர் தங்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டதாலும் இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபருக்காக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.12.2018ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்த வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அ.சா.1யை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதனை பரிசீலனை செய்து

அரும்பாவூர் காவல் நிலைய குற்ற எண் 238/2018 இதச பிரிவுகள் 147,148,341, 294(b), 323, 324 r/w 4 of TNPHW Actன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ2 ஆகவும், நிலையத்தில் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மூர்த்தி, மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் மலர், பெருமாள், ரமேஷ், அங்கமுத்து, சின்னசாமி, மூர்த்தி, மகேந்திரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் பாதியான், பக்கான் ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மற்ற எதிரிகள் பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அஸ்வின் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் இரண்டு பெறப்பட்டது. அது **அ.சா.ஆ6 மற்றும் அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 147,148,341, 294(b), 323, 324, 452 r/w 4 of TNPHW Actன்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியின் செய்கையானது மேற்படி பிரிவின் கீழ் கடந்த 20.10.2019ம் தேதி அன்று எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய் புகார் வாக்குமூலத்தை சரியாக விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு செல்லாமலேயே அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை புலன் விசாரணையில் சொல்லியது போல கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.